O.S. No.472/2022
PW–1 திரு.ஜெயக்குமார்
Date : 11.12.2024.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : –</u>

என்னுடைய நிருபண வாக்குமூலத்தை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகளை படித்து பார்த்து புரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். 1ம் பிரதிவாதியின் கணவர் பாலன் எனது குடும்ப நண்பர் என்று சொன்னால் சரிதான். எனக்கு அவர்கள் வீட்டில் அனைவரையும் தெரியும். அவர்கள் சுமார் 25 வருடங்களாக எனக்கு குடும்ப நண்பர்கள் ஆவர். நான் பணம் கொடுத்தாக சொல்லும் சமயத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் பாலதண்டாயுதபாணி வேலை பார்க்கவில்லை. நான் கடன் கொடுத்த காலகட்டத்தில் அவர் எந்த நிறுவனமோ அல்லது தொழிலோ நடத்தி வரவில்லை. எந்த வேலையும் பார்த்து வராத 1ம் பிரதிவாதியின் கணவர் பாலதண்டாயுதபாணிக்கு நான் கடன் கொடுத்ததாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்த காலகட்டத்தில் பெயிண்ட் கடை வைத்திருந்தேன். நான் பெயிண்ட் கடைக்கு வருமான வரி செலுத்தவில்லை. எனக்கு தனியாக வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் மேற்படி பணத்தை வங்கி கணக்கு வழியாக செலுத்தவில்லை. நான் பணம் வந்த வழிமுறையை வருமான வரி கணக்கில் காட்டவில்லை. எனக்கு அந்த பணம் ரியல் எஸ்டேட் மூலம் வந்தது. நான் 1ம் பிரதிவாதியின் கணவருக்கு கொடுத்த பணத்தை வருமான வரி கணக்கில் காட்டாமல் சட்டப்படியான வழிமுறை இல்லாமல் கொடுத்தேன் என்றால் சரிதான், ஆனால் வருமான வரி கணக்கில் காட்டவில்லை. நான் பாலதண்டாயுதபாணி இறந்தபிறகு 1ம் பிரதிவாதியிடம் சென்று பணம் கேட்டதாக நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது சரிதான். பாலதண்டாயுதபாணி சென்னையில் வைத்து காலமானார். 1ம் பிரதிவாதி சென்னையில் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதியிடம் நான் நேரே சென்று பணம் கேட்டேன். 1ம் பிரதிவாதியின் முகவரி தெரியாது, ஆனால் ஆதம்பாக்கம்

சென்று பணம் கேட்டேன். நான் 1ம் பிரதிவாதியிடம் போன் மூலம் பணம் கேட்டேனா என்றால் நான் 1ம் பிரதிவாதியிடம் போனில் பேசியதில்லை, அவர்களுடைய நண்பர்களிடம் சொல்லி கேட்கச்சொல்வேன். அவர்கள் சென்னையில் வைத்து போனில் பேசியுள்ளார்கள். 1ம் பிரதிவாதி எனது அழைப்பை எடுக்காத காரணத்தினால் நான் அவருக்கு போன் செய்யவில்லை. என்னிடம் 1ம் பிரதிவாதியினுடைய போன் நம்பர் இல்லை, என்னுடைய நண்பரிடம் தான் உள்ளது. 1ம் பிரதிவாதியினுடைய போன் நம்பரை என் செல்போனில் பதிவு செய்து வைக்கவில்லை. 1ம் பிரதிவாதியிடம் நான் போன் மூலம் தொடர்பு கொண்டதே இல்லை. ஆனால் என்னுடைய நண்பர் மூலம் போன் வாயிலாக 1ம் பிரதிவாதியை தொடர்பு கொண்டேன். அப்போதும் 1ம் பிரதிவாதி அந்த அழைப்பை எடுக்கவில்லை. நான் ஆதம்பாக்கம் சென்ற போது பிரதிவாதிகளை சந்தித்தேன். எனக்கு 1ம் பிரதிவாதியை அடையாளம் தெரியும். 1ம் பிரதிவாதியின் புகைப்படத்தை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். நான் ரூ.35,00,000/- கொடுத்ததற்கு தாவா புரோநோட்டை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இதே போன்று நான் 1ம் பிரதிவாதியின் கணவருக்கு கடன் கொடுத்து வாங்கியது கிடையாது. 1ம் பிரதிவாதியின் கணவருக்கு சொத்துக்கள் நிறைய உள்ளது, அந்த சொத்துக்களை விற்று பணத்தை தருவதாக சொன்ன காரணத்தினால் நான் பணம் கொடுத்தேன். நான் 1ம் பிரதிவாதியின் கணவரிடம் சொத்து சம்பந்தமான ஆவணங்கள் எதையும் வாங்கவில்லை, அதனை மனு செய்து நகல் மட்டும் பெற்றுக்கொண்டேன். நான் 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பின்பு தான் மனு செய்து சொத்து ஆவணத்தின் நகல் பெற்றுக்கொண்டேன். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நகல் பெற்றேன் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியின் மகன்களை சின்ன வயதில் பார்த்த பிறகு, சென்னை ஆதம்பாக்கம் சென்ற போது தான் பார்த்தேன். அப்போது மூத்த மகனுக்கு 32 வயதும், சிறிய மகனுக்கு 22 வயதும் இருக்கும்.

நான் 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்ததிலிருந்து 15 நாட்கள் கழித்து ஆதம்பாக்கம் சென்று பார்த்தேன். அதன்பிறகு நான் 1ம் பிரதிவாதியை தொடர்பு கொள்வதற்கு முயற்சி செய்தேன், ஆனால் அவரை பார்க்க இயலவில்லை. நான் 1ம் பிரதிவாதியை தொடர்பு கொண்டதும் இல்லை என்றும், பார்த்ததும் இல்லை என்றும், நானாக புரோநோட்டு ஒன்றை உற்பத்தி செய்து, பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.